செ.வெ.எண்: 32 நாள்: 10.02.2017

# <u>பத்திரிகைச் செய்தி</u>

## <u>தேசிய குடற்புழு நீக்கும் மாத்திரை வழங்கும் தினம்</u>
## <u>National Deworming Day</u>

தமிழ்நாடு முழுவதும் ஒரே நாளில் 1-19 வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கும் குடற்புழு நீக்கும் மாத்திரை 10.02.2017 அன்று வழங்கப்பட உள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின்படி இந்தியாவில் புழுத்தொற்று என்டமிக்காக உள்ளது. 64% குழந்தைகளுக்கு புழுத்தொற்றுக்கான சிகிச்சை தேவைப்படுகிறது. கொக்கிபுழு, நூல் புழு மற்றும் உருண்டைப்புழு அசுத்தமாக உள்ள மண் மூலமாக பரவுகிறது. மிக அதிகமான புழுத்தொற்று இருப்பின் வயிற்றுப்போக்கு, வயிற்று வலி, பசியின்மை, சோர்வு காணப்படும் உடல் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி பாதிக்கப்படும், இரத்தசோகை ஏற்படும் பள்ளி சிறுவர்கள் அடிக்கடி உடல் நலம் பாதிக்கப்பட்டு பள்ளிக்கு வராமல் இருப்பர் அல்லது படிப்பில் கவனமின்மை ஏற்படும்.

**<u>புழுத்தொற்றை எவ்வாறு தடுப்பது?</u>**

உணவு உண்னும் முன்பும் கழிவறை சென்று வந்த பின்பும் கைகளை சுத்தமாக கழுவுதல், சுகாதார கழிவறையினைப் பயன்படுத்துதல், காலில் செருப்பு அணிதல், பாதுகாப்பான குடிநீர் குடித்தல், நன்கு சமைக்கப்பட்ட உணவு உண்ணுதல், காய்கறி மற்றும் பழங்களை நன்கு கழுவிய பின்னர் பயன்படுத்துதல், கைவிரல் நகங்களை வெட்டி தூய்மையாக வைத்துக்கொள்ளுதல்.

**<u>சிகிச்சை:</u>** அல்பென்டசோல் மாத்திரை 400 மி.கி அல்லது சிரப் 400 மி.கி / 10 மிலி புழுத்தொற்றை ஒழிக்க இது பாதுகாப்பான மருந்து ஆகும்.

**<u>மருந்து வழங்கும் அளவு:</u>** 1-2 வயது அரை மாத்திரை (அ) 200 மி.கி (அ) 5 மி.லி சிரப், 2-19 வயது 400 மி.கி (ஒரு முழு மாத்திரை)

**<u>நன்மைகள்:</u>** இரத்தசோகையைக் குறைத்து குழந்தையின் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றம் அளிக்கும். குழந்தைகளின் வளர்ச்சியும் ஆரோக்கியமும் நன்கு இருக்கும், நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். குழந்தைகள் பள்ளி வருகையில் (Attendance) முன்னேற்றம் இருக்கும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பிப்ரவரி மாதம் 10ம் தேதி அன்று அனைத்து அங்கன்வாடி மையங்கள், அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் 1-19 வயது குழந்தைகளுக்கு, (481600 குழந்தைகளுக்கு) ஆசிரியர் மற்றும் அங்கன்வாடி அமைப்பாளர்கள் மூலம் அல்பென்டசோல் மாத்திரை மதிய உணவிற்கு பிறகு வழங்கப்பட உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார். 1-5 வயது குழந்தைகளுக்கு அங்கன்வாடி அமைப்பாளர்கள் / பணியாளர்கள் அங்கன்வாடி மையத்தில் (மதிய உணவிற்கு பிறகு பயனாளிகள் மாத்திரைகளை உட்கொள்ள ஏதுவாக) வழங்கப்படும். அங்கன்வாடிக்கு வராத குழந்தைகளை ஆக்ஷா (அல்லது) தன்னார்வலர் அழைத்து வந்து மாத்திரை வழங்கவேண்டும். 10.02.2017 அன்று வழங்க இயலாத குழந்தைகளுக்கு 15.02.2017 அன்று மாத்திரை வழங்கப்படும்.

உடல் நலமில்லாத குழந்தைகளுக்கு மற்றும் சிகிச்சை பெற்று வரும் குழந்தைகளுக்கு அல்பென்டசோல் வழங்கக்கூடாது. பாதுகாப்பான குடிநீர் வைத்து இருக்க வேண்டும். குழந்தைகளை மாத்திரையை மென்று பின்னர் விழுங்குமாறு அறிவுறுத்த வேண்டும். எனவே 10.02.2017 அன்று நடைபெறும் தேசிய குடற்புழு நீக்கும் தினத்தன்று 1 வயது முதல் 19 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இம்மாத்திரையை வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**